OPEN ACCESS

Manuscript ID:
TAM-11022026-11423

Volume: 11

Issue: 2

Month: October

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 10.08.2026

Accepted: 17.09.2026

Published: 01.10.2026

Citation:
Gayathri, K. "The Lifestyle of the Kurinji People." *Shanlax International Journal of Tamil Research*, vol. 11, no. 2, 2026, pp. 101–06.

DOI:
https://doi.org/10.34293/tamil.v11i2.11423

*Corresponding Author:
gayuboss8@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

The Lifestyle of the Kurinji People

K. Gayathri
Head & Department of Tamil
Srinivasan College of Arts and Science, Perambalur

Abstract
Human life can be understood through literature. The way of life of the people of the Sangam period was based on land. The ancient Tamils divided the lands into Kurinji, Mullai, Marutham, Neythal, and Palai and lived according to the characteristics of those lands. The lifestyle of the Kurinji people included marriage, occupation, hunting, agriculture, food hab, hospitality, art, clothing, accessories, domestic life, worship, beliefs, etc. They lived a refined lifestyle.
Keywords: *The Five Virtues are Theft, Chastity, Hospitality, Hunting, Art, Worship, Beliefs, etc.*

References
1. A. Dakshinamurthy (Commentator), Ainkurunuru, Poem 263: 1-3.
2. Ibid., 207: 1-4.
3. Durai. Dhandapani (Commentator), Manimekalai, Poem 11: 93-96.
4. A. Dakshinamurthy (Commentator), Ainkurunuru, Poem 285: 1-3.
5. Era. Jayapal (Commentator), Akananuru, Poem 7: 2.
6. V. Nagarajan (Commentator), Pattinappalai, line 91.
7. A. Viswanathan (Commentator), Kalithokai, Poem 18: 10-11.
8. A. Dakshinamurthy (Commentator), Ainkurunuru, Poem 218: 2.
9. Ibid., 382.
10. Ibid., 284.
11. S. Subash Chandra Bose (Commentator), Tolkappiyam: Porulathikaram, Karpiyal, Sutra 142.
12. A. Dakshinamurthy (Commentator), Ainkurunuru, Poem 203.
13. S. Subash Chandra Bose (Commentator), Tolkappiyam: Porulathikaram, Akattinaiyiyal, Sutra 5.
14. A. Dakshinamurthy (Commentator), Ainkurunuru, Poem 241: 1-2.
15. Gna. Manikkavasagan (Commentator), Silappathikaram, Mangala Vazhthu Padal, verse 1.
16. Ibid., 5.
17. Ibid., 9.
18. K. Irasaratnam, Sanga Ilakkiyathil Podumakkal (Common People in Sangam Literature), p. 140.
19. S. Sakthivel, Naattuppura Iyal Aayvu (Folklore Studies), p. 153.
20. A. Dakshinamurthy (Commentator), Ainkurunuru, Poem 218: 1-2.

குறிஞ்சித் திணையில் மக்கள் வாழ்வியல்

க. காயத்ரி
தலைவர் தமிழ்த்துறை
சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பெரம்பலூர்

ஆய்வுச் சுருக்கம்

மனித வாழ்வியலை இலக்கியங்கள் மூலமாக அறியமுடிகின்றது. சங்க கால மக்கள் வாழ்க்கை முறையானது நிலத்தின் அடிப்படையில் காணப்பட்டது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று பண்டைத் தமிழர்கள் நிலங்களைப் பிரித்து அந்த நிலங்களின் தன்மைக்கு ஏற்ப வாழ்ந்தனர். குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கை முறையில் திருமணம், தொழில், வேட்டையாடுதல், வேளாண்மை செய்தல், உணவு முறைகள், விருந்தோம்பல் பண்பு, கலை, ஆடைகள், அணிகலன்கள், இல்லற வாழ்க்கை, வழிபாடு, நம்பிக்கைகள் முதலியவற்றை உள்ளடக்கிய வாழ்க்கை முறைகளை செம்மையுற வாழ்ந்தனர்.

திறவுச் சொற்கள்: *ஐந்திணைகள், களவு, கற்பு, விருந்தோம்பல், வேட்டையாடுதல், கலை, வழிபாடு, நம்பிக்கைகள், குறிஞ்சித்திணை.*

முன்னுரை

சங்க கால மக்கள் நில அடிப்படையில் வாழ்ந்தனர். நிலத்தினை ஐந்து வகையாகப் பிரித்துத் திணை என்று பெயரிட்டனர். மக்களுடைய வாழ்வாதாரம் திணைச் சார்ந்தே காணப்பட்டது. குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த பகுதிகளும் ஆகும். நிலத்தின் இயல்பைப்போல மக்களின் ஒழுக்கமும் அதற்கேற்ப அமையும் என்பதைக் கண்டு உணர்ந்தவர்கள் பழந்தமிழர் ஆவர். அதன்படி, களவு என்னும் காதலானது வாழ்வின் போக்கை நயமாகக் காட்டு வதற்கும், மலைவாழ் மக்கள் வாழ்வியலில் ஓர் அங்கமாகவும் திகழ்கிறது.

குறிஞ்சிச் சூழல்

வன விலங்குகளும், அடர்ந்த காட்டுப் பகுதியும், ஒலி முழக்கும் அருவியும், மலர் மிகுந்த சுனையும், இயற்கையின் எழிலார்ந்த மலைப் பகுதியில் வாழும் மக்களும், இயற்கை எழுப்பும் உணர்வுகளோடும் மக்கள் மனமொன்றி வாழ்ந்தனர். குறிஞ்சித் திணையில் வாழ்பவர்களுக்கு மலை முகடுகளிலும், சரிவுகளிலும் விளைந்த ஐவன நெல்லையும், மூங்கில் அரிசியையும் இவர்களின் இன்றியமையாத உணவுப் பொருளாகும். மரங்களை வெட்டியும், காடுகளை அழித்து நிலங்களை உழுது திணை விதைத்தல், கிழங்கு வகை களை பயிரிடுதல், தேன் எடுத்தல், வேட்டையாடுதல் போன்றவை இம்மக்களின் தொழிலாகும். விலங்குகள், பறவைகள், அருவிகள், மலர்கள், மக்களுடைய வாழ்வியலில் இரண்டறக் கலந்துக் காணப்படுகிறது.

களவும் கற்பு மணமும்

சொத்துச் சுகங்களை உடையவரும், எளிதாகப் பயன் பெறுபவருமான மருத நிலத்தார் போல் அல்லாமல், தங்களுடைய கடும் முயற்சியின் பயனாக வருகின்ற எளிய வாழ்வினை நிறைவாக வாழும் மக்களே குறிஞ்சி நில மக்கள் ஆவார். இவர்கள் களவு உறவும் பின்னர் கற்பு மணமாக நிறைவுச் செய்யும் மனையறம் காக்கும் மக்களாகத் திகழ்கின்றனர்.

தொழில்

சங்க கால மக்களின் சமூக அமைப்பை இலக்கியங்கள் மூலம் உணரமுடிகிறது. அவர்கள் நகரங்கள், சிற்றூர்களில் தங்களது தொழிலை மேற்கொண்டனர். குறிஞ்சி நிலத்தில் குறவர் என்னும் வகுப்பினர் வாழ்ந்துள்ளனர். அவர்களின் தொழிலாக வேளாண் தொழில், வேட்டையாடுதல், தேன் எடுத்தல் போன்றவை முதன்மையானத் தொழில்களாகும்.

வேட்டையாடுதல்

குறிஞ்சி நில மக்கள் வேட்டையாடுதலைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். அம்பும் வில்லும் அவர்தம் தொழில் கருவிகளாக விளங்கின. வேட்டையாடத் துணைக்கு நாய்களைப் பழக்கப்படுத்திப் பயன்படுத்தினர். வேட்டையாடுவதில் கிடைத்த இறைச்சியைப் பண்டமாற்று மூலமாக விற்பது வழக்கில் இருந்தது. மலைப்பகுதியில் விளையும் தினைப்புனக் காவல் புரிவது குறிஞ்சி நில மக்களின் பணியாக இருந்தது. இதனை,

> **சிறுகண் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்**
> **உறுகல் அடுக்கத்து வில்லேர் மாற்றி**
> **ஐவனங் கவரும் குன்ற நாடன்**[1]

என்னும் ஐங்குறுநூறு பாடலில் தன்னுடைய விளை நிலங்களில் ஐவன நெல்லைக் காத்தலின் பொருட்டு வேட்டையாடினர் என்று அறியமுடிகிறது.

வேளாண் தொழில்

ஒரு நாட்டின் முதுகெலும்பாகக் கருதப்படுவது வேளாண் தொழில் ஆகும். மனிதனின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய ஆற்றல் வேளாண் தொழிலுக்கு மட்டுமே உண்டு. வேளாண்மை என்று கூறப்படுகின்ற விவசாயத் தொழில் சங்க காலங்களில் சிறப்பாக நடைப்பெற்றது. இதனை,

> **அன்னாய் வாழி வேண்டன்னை ! நன்று**
> **உணங்கல் கொல்லோ நின்தினையே**
> **உவக்காண்**
> **மழை தலை ! வைத்து**[2]

என்று ஐங்குறுநூறு தெரிவிக்கிறது. வேளாண்மை என்பது வானம் பார்த்த பூமியாக இருந்துள்ளது. மழை பொழிந்தால் மட்டுமே பயிர் வகைகள் விளையும், இல்லையெனில் விளையாது. விவசாயத் தொழிலுக்கு மழை மிகவும் முக்கியமானதாகும் என்பதை நன்கு உணர்ந்த மக்கள் மழைக்காக இறைவனை வேண்டி வழிபாடு செய்துள்ளனர்.

உணவு

பண்டைத்தமிழர் வாழ்வியலில் விருந்தோம்பல் சிறப்பாகவும் மதிக்கக் கூடியதாகவும் காணப்பட்டது. உணவுக் கொடுத்தவர் உயிர்க் கொடுத்ததாகக் கருதப்படுவர். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்பது மக்களின் உயரியப் பண்பாகக் கருதப்பட்டது. இதனை,

> **ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்**
> **மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை**
> **மண்டினி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**
> **உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**[3]

என்னும் மணிமேகலைப் பாடல் மூலம் அறியமுடிகிறது. பண்டைத் தமிழர் வாழ்வியலில் உயர்வான பண்பாட்டு அடையாளமாக விருந்தோம்பல் என்னும் உணவு அளித்தல் மிகச் சிறப்பாகக் கருதப்பட்டது.

தினை மாவு

தினைப்புனம் காவலுக்குப் பெண்கள் செல்வது வழக்கமாகும். அவ்வாறுக் காவலுக்குச் செல்லும்போது பெண்கள் தினை மாவையே உணவாகப் பயன்படுத்தினர். இதனை,

> **பின்னருங் கூந்தல் நன்னுதல் குறமகள்**
> **மென்றினை நுவனையுண்டு தட்டையின்**
> **ஐவனச் சிறுகிளி கடியும் நாட !**[4]

என்று ஐங்குறுநூறு பாடல் மூலம் உணர முடிகிறது.

ஆடை

சங்க காலத் தமிழர்கள் அவரவரின் தகுதிக்கு ஏற்றவாறு உடையணிந்தனர். தழை, மரப்பட்டை விலங்கின் தோலால் உருவாக்கப்பட்ட ஆடைகளை உடுத்தினர்.

தழை ஆடை

சங்க காலத்தில் தழை ஆடை உடுத்தினர். குளிர்ந்த தழைத்த அசோகின் தளிராலான தழை ஆடையைச் செவிலித்தாய் உடுத்தினர். இதனை,

.... தண்தழை உடையை[5]
பைந்தமிழ் மா மகளிரோடு[6]
ஒன்றன் கூறாடை யுடுப்பவரே யாயினும்
ஒன்றினார் வாழ்கையே வாழ்க்கை[7]

என்ற அகநானூறு, பட்டினப்பாலை, கலித்தொகை பாடல்களில் காவிரிப் பூம்பட்டினத்தில் பரதவ சேரிப் பெண்டிர் தழையாடை உடுத்தியதைத் தெரிவிக்கிறது.

அணிகலன்கள்

ஒரு சமூதாயத்தின் நாகரீகத்தையும், வளர்ச்சியையும் காட்டுவது அணிகலன்கள் ஆகும். தொடக்கக் காலத்தில் இயற்கைப் பொருள்களாகிய தாவரங்களையும் செடி கொடிப் போன்ற மலர்களை அணிகலன்களாக அணிந்தனர். குழை எனப்படும் தளிரை காதில் அணிந்தனர். அணிகலன்களை அணி, பூண், இழை, கலன் என்று பல பெயர்களால் அழைத்தனர்.

வளையல்கள்

வளையல் என்றால் காப்பு என்று பொருளாகும். உருவத்தைக் கருத்தில் கொண்டு பிற்காலங்களில் வளையல்கள் என்று அழைத்தனர். சங்கினை அறுத்துச் செய்யப்பட்ட முன் கையில் விளங்கும் வளையல்கள் உடல் மெலிவினால் கழலுவதை,

மயிற்வார் முன்கை வளையும் செறூஉம்[8]

என்று ஐங்குறுநூறு பாடல் கூறுகிறது.

வீரக்கழல் அணிதல்

வெண்மையான வேலையும் அழகிய கழலையும் உடைய காளை போன்றவனுடன் கூடிப் போவதற்கு அரிய சுரத்தில் செல்கிறாள். இத்தகைய தலைவன் இரவில் தங்குவதால் கல் என்ற ஓசை மிக்க இந்தச் சிறிய ஊரில் திருத்தமான அணியினை அணிந்த மகளிரைப் பெற்ற பெருமானை கண்டு வருத்தம் அடைகிறாள். இதனை,

புள்ஒலிக்கு அமர்த்த கண்ணள், வெள்வேள்
திருந்து கழல் காளையொடு அருஞ்சுரங் கழிவோன்
ஏல்லிடை அசைத்த நல்லென் சீறூர்ப்
புனை இழை மகளிர்ப் பயந்த
மனை கெழு பெண்டிர்க்கு நோவுமார் பெரிதே[9]

என்று ஐங்குறுநூறு குறிஞ்சிப் பாடல் மூலம் உணரமுடிகிறது.

சங்க காலத்தில் இயற்கை தழுவிய காலமாகும். தமிழர்களின் இரு கண்களாகக் காதலும் வீரமும் காணப்பட்டன. உணர்வுகளுள் மிக நுண்ணியதாகக் காணப்படுவது காதல் ஆகும். உலகிற்கு உரியது என்றாலும் இருவர் என்ற நிலையில் அடங்கி விடுகிறது. இதனை,

அளிய தாமே செவ்வாய் பைங்கிளி
குன்றக் குறவர் கொய்திணைப் பைங்கால்
இருவி நீள்புனம் கண்டும்
பிரிதல் தோற்றாப் பேரன்பினவே[10]

என்று ஐங்குறுநூறு கூறுகிறது. பயன்கொள்ள இயலாத நிலையிலும், முன் கொண்ட பயனை நினைத்து, புனத்தின் இரு வினையினை நாடி வந்து படிந்து, நீங்க நினைக்காமல் இருக்கும் கிளியைப் போலவே, நீயும் இவளை என்றும் அன்போடு பேணிக்காத்து வாழ வேண்டுமென்று கூறுவதை உணரமுடிகிறது.

இது நிறைவுறும் வண்ணம் விரைய வந்து மனத்தல் வேண்டும் என்பதை உணர்த்துகிறது. பெரிதான அன்பே காதல் என்ற மன நெகிழ்ச்சியை ஒரு மனிதனுக்குக் கொடுக்கிறது.

திருமணம்

சங்க காலத் திருமணத்தைத் திணை மரபுத் திருமணம், மறுதலைத் திருமணம் என்று இரண்டாகப் பகுக்கலாம். தொல்காப்பியரும் பெற்றோர் அனுமதியுடன் கொள்ளும் மணமுறை, காதலித்து உடன்போக்கில் நடைபெறும் மணமுறை என்று இரு வகையாகப் பிரிக்கிறார். இதனை,

கற்பெனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்
கொள்வதுவே[11]

என்று தொல்காப்பியர் திருமணத்திற்கு இலக்கணம் வகுக்கிறார். தகுதியுடைய தலைவனுக்கு திருமணம் செய்து வைக்கும் முறை கரணம் என்றும், சடங்கோடுதரத் தலைவன் தலைவியைத் திருமணம் செய்வது கற்பு என்றும் மூவாயிரம் ஆண்டுக்கு முன்பே வரையறை செய்துள்ளதை அறிய முடிகிறது. சங்க காலம் முதல் தற்காலம் வரை திருமணம் நடைபெற்றால் பெண்களின் தலையில் மலர் சூடும் மரபு மக்கள் வாழ்வியலில் காணப்படுகிறது.

இல்லற வாழ்க்கை

பழந்தமிழர் ஒருவர் கற்புடைய மனைவியைத் தவிர பெறுவதற்குரிய பேறு ஒன்றும் எல்லை என்று கருதினர். மனைவி தன் கணவனை உயிராகவும் அவன் நலனைத் தன் நலனாகவும் கருதி வாழ்கிறாள். கணவன் வீட்டில் வறுமை இருந்த போதும் தன் வீட்டுப் பெருமையை எண்ணாது அவனோடு வாழ்கிற உன்னத அன்பினை சங்க இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. இதனை,

அன்னாய் வாழி வேண்டன்னை நம்படப்பை[12]

என்று ஐங்குறுநூறு பாடல் கூறுகிறது. கணவன் ஊரில் மான்கள் குடித்து, தழைகள் வீழ்ந்து அழுகிய நாற்றமுள்ள நீரைக் குடித்த தலைவி, தன்னுடைய தாய் வீட்டில் உண்ட தேன் கலந்த பால் போல் இனிக்கிறது என்று கூறுகிறாள். பழந்தமிழர் இல்லறத்தில் வறுமை இருந்த போதும் அவர்கள் செம்மையாக வாழ்ந்து அதனை நல்லறமாக்கியத்தை உணரமுடிகிறது.

வழிபாடு

மக்கள் வழிபாடுகளில் இயற்கையும் இடம்பெற்றன. காடு, மலை, நிலம், கடல் ஆகியவற்றைத் தெய்வம் உறையும் இடமாகக் கருதினர். இதனை,

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்[13]

என்று இயற்கை வழிபாட்டிற்கு சான்றாகத் தொல்காப்பியர் கூறுகிறார். சங்க கால மக்களின் வெற்றித் தெய்வமாகப் போற்றப் படும் கொற்றவை முருகனுடைய தாயாகக் கூறப்படுகிறது. இதனை,

.... அன்னை
வேலன் தந்தா னாயினவ் வேலன்
வெறிகழ் நாடன் கேண்மை[14]

என்று ஐங்குறுநூறு பாடலில் தெய்வ வழிபாட்டைக் குறிப்பிடுகிறது. மேலும்,

திங்களைப் போற்றதும் திங்களைப் போற்றதும்[15]
ஞாயிறு போற்றதும் ஞாயிறு போற்றதும்16
மாமழை போற்றதும் மாமழை போற்றதும்[17]

போன்ற சிலப்பதிகாரப் பாடலிலும் இயற்கையைத் தெய்வமாக வெளிப்பட்டதை அறியமுடிகிறது. இதன் மூலம் சங்க கால மக்களின் வாழ்வியல் தளத்தில் தெய்வங்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளதை உணர முடிகிறது. இத்தகைய தெய்வங்கள் இலக்கியங்களில் மட்டுமின்றி அகழ்வாராச்சி குறிப்புகள், ஓவியங்கள், சிற்பங்கள், கல்வெட்டுகள் போன்றவற்றின் வாயிலாகவும் அறியமுடிகிறது.

நம்பிக்கை

மனிதனின் வாழ்வியலில் இன்றியமையாத இடத்தைப் பெறுவது நம்பிக்கை ஆகும். இத்தகைய நம்பிக்கையைப் பழக்க வழக்கம்,

சடங்குகள் எனவும் குறிப்பிடப்படுகின்றது. நம்பிக்கை என்பதனை மனித மனத்தினுடைய வாழ்க்கை அனுபவத்தின் முதிர்ச்சியால் விளைகின்ற ஒன்றாகும்[18] என்று கு.ராசரெத் தினம் கூறுகிறார். மேலும், நம்பிக்கை பற்றி, மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத பொழுதும் மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவையே நம்பிக்கைகளாக உருவாகின்றன[19] என்று சு.சக்திவேல் கூறுகிறார். இதனை,

நுண்ணோர் புருவத்த கண்ணும் ஆகும்
மயில்வார் முன்கை வளையும் செறூஉம்[20]

என்று ஐங்குறுநூறு பாடலில் கண் துடிப்பு எழலும், கைவளை செறிவுறலும், நன்மைகள் நாடி வருவதற்கான நல்ல அறிகுறிகள் என்பது பண்டையத் தமிழரின் நம்பிக்கைகள் ஆகும்.

முடிவுரை

சங்க காலத் தமிழர்கள் இயற்கையை ஐந்து நிலங்களாகப் பிரித்து வாழ்வியலை வகுத்தனர். மலையும் மலை சார்ந்த இடமாகிய குறிஞ்சியில் குறவர், குறத்தியர், தலைவன், தலைவியின் வாழ்வியலானது சிறப்புற அமைந்துள்ளது. குறிஞ்சி நில மக்கள் வாழ்வியலில் தொழில், கலை, தெய்வ வழிபாடு, இயற்கையைப் போற்றுதல், காதல், திருமணம், இல்லற வாழ்க்கை என்று அனைத்திலும் மகிழ்வான, மனநிறைவான வாழ்வியலை வாழ்ந்தனர் என்பது உணர முடிகிறது.

சான்றெண் விளக்கம்

1. அ.தட்சிணாமூர்த்தி (உ.ஆ.), ஐங்குறுநூறு, பா. 263:1-3.
2. மேலது, 207:1-4.
3. துரை. தண்டபாணி (உ.ஆ.), மணிமேகலை, பா.11:93-96.
4. அ. தட்சிணாமூர்த்தி (உ.ஆ.), ஐங்குறுநூறு, பா.285:1-3.
5. இரா.ஜெயபால் (உ.ஆ.), அகநானூறு, பா.7:2.
6. வி.நாகராசன்(உ.ஆ.), பட்டினப்பாலை, அ.91.
7. அ.விசுவநாதன்(உ.ஆ.), கலித்தொகை, பா.18:10-11.
8. அ.தட்சிணாமூர்த்தி (உ.ஆ.), ஐங்குறுநூறு, பா.218:2.
9. மேலது, 382.
10. மேலது, 284.
11. ச.சுபாஷ் சந்திரபோஸ் (உ.ஆ.), தொல். பொருளதிகாரம், கற்.நூ.142.
12. அ.தட்சிணாமூர்த்தி (உ.ஆ.), ஐங்குறுநூறு, பா.203.
13. ச.சுபாஷ் சந்திரபோஸ் (உ.ஆ.), தொல். பொருளதிகாரம், அ.நூ.5.
14. அ.தட்சிணாமூர்த்தி (உ.ஆ.), ஐங்குறுநூறு, பா.241:1-2.
15. ஞா.மாணிக்கவாசகன் (உ.ஆ.), சிலப்பதிகாரம், மங்.பா.1.
16. மேலது, 5.
17. மேலது, 9.
18. கு.இராசரெத்தினம், சங்க இலக்கியத்தில் பொதுமக்கள், ப.140.
19. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.153.
20. அ.தட்சிணாமூர்த்தி (உ.ஆ.), ஐங்குறுநூறு, பா.218:1-2.